DEPOSITION OF WITNESS
(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.154/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ஜோதிபாசு (காவல் ஆய்வாளர்) (PW.14 ) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of July 2026
( எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை –**

1. நான் தற்போது மதுரை திலகர் திடல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 15.08.2024ம் தேதி முதல் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி உட்கோட்டம் நரிக்குடி வட்ட காவல் ஆய்வாளராக பணியாற்றி வந்தேன். அது சமயம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்புகளை பார்வையிட்டபோது நரிக்குடி காவல் நிலைய குற்ற எண். 130/2024 பிரிவு 331(3), 305 BNS வழக்கு கோப்பை பார்வையிட்டபோது அந்த வழக்கில் அப்போதைய சார்பு ஆய்வளார் பிரபாகரன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதனை அப்போதைய காவல் ஆய்வாளர் திருமதி.ரமாதாணி முதல் விசாரணை மேற்கொண்டு வழக்கின் எதிரியை கண்டுபிடிக்க வேண்டிய

நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். மேற்படி வழக்கினை நான் 21.08.2024ம் தேதியன்று புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவம் நடந்த இலுப்பைகுளம் சென்று சம்பவ இடத்தில் சுற்றி குடியிருக்கும் 14 நபர்களிடம் விரல்ரேகை பதிவு செய்து சம்பவ இடத்தில் எடுக்கப்பட்டிருந்த சந்தேக விரல்ரேகை பதிவுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு விருதுநகர் மாவட்டம் ஒருவிரல் ரேகை பதிவு கூடத்திற்கு அனுப்பி வைத்தேன்.

2. அந்த ரேகையை ஆய்வு செய்த கைரேகை பதிவு செய்த ஆய்வாளர் திருமதி. கற்பகவள்ளி அவர்கள் தனது அறிக்கையில் சம்பவ இடத்தில் உள்ள சந்தேக ரேகைக்கும், நான் அனுப்பியிருந்த கைரேகளும் ஒத்துப்போகவில்லை என்று அறிக்கை வழங்கினார். அன்றையதினம் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்னர் நான் பிரதம மந்திரி பாதுகாப்பு பணிக்காக 04.04.2025 முதல் 06.04.2026ம் தேதி வரை சென்றபோது அப்போதைய பொறுப்பு ஆய்வாளராக இருந்த திருச்சுழி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திருமதி. தென்றல் அவர்கள் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிரிகளை தேடிவந்த நிலையில் 04.04.2025ம் தேதி 15.00மணிக்கு நரிக்குடி – திருப்புவனம் செல்லும் சாலையில் துய்யனூர் பேருந்து நிறுத்தத்தில் வாகன தணிக்கையின் போது அந்த வழியாக இரு சக்கர வாகனத்தில் வந்த பின்னால் பெயர் விலாசம் தெரிந்த எதிரி செந்தில்குமாரை காரணம் கூறி கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து அதன்பேரில் எதிரியின் சொந்த ஊரான திருப்புவனம் தாலுகா, துாதை கிராமத்திற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் எதிரி எடுத்து கொடுத்த நகைகளை அத்தாட்சியில் கைப்பற்றி எதிரியை தக்க வழி காவல் மூலம் நீதிமன்றத்திற்கு 05.05.2025ம் தேதி நீதிமன்ற காவலுக்கு

உட்படுத்தியுள்ளார். அதன்பின்னர் நான் வழக்கு கோப்புகளை பார்வையிட்டு வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கு நீதிமன்றத்தில் பி.ஆர் நம்பர் பெற்று 16.05.2025ம் தேதியன்று எதிரி மீது பிரிவு 331(3), 305 BNS கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். எதிரி தரப்பில் இளம் வழக்கறிஞர் ஆஜர். எதிரி தர்ப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.